# தேவதாசிகள் ஓர் ஆய்வுப்பார்வை
# A Research View on Devadasis

பிரகாஷ்தாஸ். கு. இராமதாஸ் / Prakashdas K. Ramadas[1]
முனைவர் இரா. சீதாலட்சுமி / Dr. R. Seeta Lechumi[2]

## Abstract

The facts about *Devadasis* (servants of God), who also mean *Devaradiyargal*, can be found all over the history and literature of India, especially in Tamilnadu. However, the origin of the *Devadasis*, who were once worshipped as prominent figures of the society, and what made them fall to be trapped in the dirt of the society should be analysed. In-depth research should be done about their lifestyle, social status, arts, culture, contribution to society, and literary works. The music and dance nurtured by *Devaradiyargal* are one of the purest art forms today. On the contrary, less light is shed on the facts about those who protected the art forms. Thus, the research about *Devaradiyargal* should be immensely encouraged.

Date of submission: 2022-04-05
Date of acceptance: 2022-06-22
Date of Publication: 2022-07-28
Corresponding author's Name:
Dr. R. Seeta Lechumi
Email: rseeta@um.edu.my

**Key Words:** Devadasi, Tamil Nadu, Bharathanatyam, tradition, Arts

### அறிமுகம்

காலவெள்ளத்தில் தமிழகத்தில் தோன்றிய பல அற்புதமான நிகழ்வுகள் மறைந்து போயுள்ளன; அதன் சுவடு தெரியாமல் மாறிப்போயிருக்கின்றன. அப்படி நிகழ்ந்திருக்கக் கூடிய ஒன்றுதான் கலைகளையும் இறைப்பணிகளையும் வளர்ப்பதில் தங்கள் வாழ்வினை அர்ப்பணம் செய்த தேவதாசிகளைப் பற்றியச் செய்திகள். இசையும், நாட்டியமும் இன்று தெய்வீகத்தன்மை கொண்டு விட்டன. அவற்றைக் கற்றுத்தேறுவது ஒரு கௌரவமாக இக்காலமக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டனர்.

கலைகள், கோயில்களில் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டபோது அவற்றைப் பேணி வளர்த்து, காலவெள்ளத்தில் சமூகத்தின் இழிநிலைக்குத் தள்ளப்பட்டபோதும், அக்கலைகளைக் காத்து நின்று கலையுலகிற்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர் இத்தேவரடியார்கள் எனில் மறுப்பதற்கில்லை. சமூகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்பட்ட தேவரடியார்கள் நாளடைவில் எவ்வாறு சமூக அவலங்களில் சிக்குண்டு மதிப்பிழந்தனர்; அவர்களது வாழ்வியல், சமூகநிலை, கலை, பண்பாடு, தேவதாசிகள் ஆற்றியுள்ள சமூகத்தொண்டு, அவர்களது இலக்கியப்பணி ஆகியவை குறித்த விரிவான ஆய்வுகள் தேவை. தேவரடியார்களால் வளர்க்கப்பட்ட கலைகளாகிய இசையும் நாட்டியமும் இன்று உலகளவில் பிரசித்திப்பெற்று விளங்குகிறது.

[1] The author is co-founder of Premalaya Arts and doctoral candidate from Academy of Malay Studies, University of Malaya, Kuala Lumpur. prakashdasvasi@gmail.com

[2] The author is senior lecturer in Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

## நோக்கம்

கலையுலகின் முன்னோடிகளாக இன்று பலர் அறியப்பட்டாலும் அதன் ஆதிமுன்னோடிகள் தேவரடியார்கள் என்றால் மிகையாகாது. அத்தேவதாசிகளின் வாழ்வியல், சமூகநிலை, கலை, பண்பாடு, அவர்கள் ஆற்றியுள்ள சமூகத்தொண்டு ஆகியவற்றைப் பொதுநிலையில் விவரிப்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

சமயநெறியில் சிறந்தநாடு இந்தியா ஆகும். எங்குத் திரும்பினும் தெய்வீகமணம் கமழும்; தெருக்களில் வீற்றிருக்கும் முச்சந்திவிநாயகர் முதல் உலகப்பிரசித்திப்பெற்ற திருத்தலங்கள் வரை ஒருங்கே அமைந்திருக்கும் அற்புதநாடு அது. பன்னெடுங்காலமாகக் கோயில் வழிபாட்டுமுறைகளில் பலஆகமவிதிகள் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளன. இத்தகைய வழிபாட்டில் இறைத்தொண்டிற்கென ஏற்படுத்தப்பட்ட ஒருமுறைதான் “தேவதாசிமுறை” ஆகும். இந்தியா முழுவதிலும் இந்த முறை பரவலாகக் காணப்பட்டுள்ளது(Jayna kathari&Deekshitha Ganesan, 2019 P.9). பண்டைய தமிழகக் கோயில் வழிபாடுகளும் கலைகளும் அழிந்தொழியாவண்ணம் காத்து வந்தவர்கள் தேவதாசிகள் என்றால் மிகையாகாது.

## கருத்துரை

தேவதாசிகள் இறைவனுக்காகவும் இறைப்பணிகளுக்காவும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அதனால், “தேவ + அடியார்கள் = தேவரடியார்கள்” எனப்பட்டனர்; இறைவனுக்கு அடிமையானவர்கள் என்றும், “தேவ+தாசிகள் (தாசன், தாசி என்றால் அடிமையென்று பொருள்) = தேவதாசிகள்” என்றும் அழைக்கப்பட்டனர். “தேவனின் (இறைவனின்) அடிமைகள்” (Jayna kathari&Deekshitha Ganesan, 2019, p.9) என்னும் பொருள்படும்படி அவர்களது பெயர் அமைந்துள்ளது. இன்னும் சில குறிப்புகளில் இறைவனைக் கணவனாகக் கொண்டவர்கள் (Mrs. R. Kalaivani , 2015, pp.50) என்றும் தேவதாசிகள் குறிப்பிடப்படுகின்றனர்.

## தென்னகத்தில் தேவதாசிகள் முறை

தென்னகத்தின் பல பகுதிகளில் தேவதாசிகள் அந்தந்தப் பகுதிகளுக்குரிய பெயர்களில் அழைக்கப்பட்டிருக்கின்றனர். ஆந்திராவில் “ஜோகினி, மாத்தம்மா, வெளுகு” என்றும், கர்நாடகத்தில் “எல்லம்மா” என்றும், மகாராஷ்டிரத்தில் “மாதங்கி” என்றும், தமிழகத்தில் “தேவரடியார்கள்” (Jayna kathari & Deekshitha Ganesan, 2019, p.10-11) என்றும் அவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

## பழங்கால தமிழகத்தில் தேவடியார்கள்

தமிழகத்தில் தேவரடியார்களுக்குச் சிறப்பிடம் வழங்கப்பட்டு வந்துள்ளது. இவர்களைப் பற்றி கே.கே.பிள்ளை தமது நூலில், “இசையிலும் கூத்திலும் வல்லுநரான பெண்கள் பலர் கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். கல்வெட்டுகளில் இவர்கள் தேவரடியார்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். தேவரடியார்களுக்குத் தலைக்கோலிகள், தளிச்சேரிப்பெண்டுகள், பதியிலார், கோயிற்பிணாக்கள் என்றும் பெயர்கள் வழங்கின” எனக் கூறியுள்ளார் (பிள்ளை, *2015,* p.*336*) .

பழங்காலத் தமிழகத்தில் ஆண்களும் பெண்களும் கோயில்களில் இறைவனுக்குத் தங்களைத் தாங்களே அடிமைகளாக மனமுவந்து அர்ப்பணித்துக் கொண்டனர். இந்த அடிமைமுறை என்பது அமெரிக்கா, ஐரோப்பாநாடுகளில் இருந்தது போன்ற அடிமைமுறை அல்ல. மற்ற நாடுகளில் இருந்த அடிமைகளைப் போல கோயில்களுக்குத் தம்மை அடிமைகளாக்கிக் கொண்ட தமிழகத்துத் தேவதாசிகள் இழிவுபடுத்தப்படவில்லை; கொடுமைப்படுத்தப்படவுமில்லை. மாறாக அவர்கள் சமூகத்தில் உயர்ந்தநிலையில் போற்றப்பட்டனர். இவ்வாறு கோவில்களிலில் இறைவனுக்கு அடிமையாகும் முறைக்குப் பலசான்றுகள் இலக்கியத்தில் உள்ளன. சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தில், “.... யானும் என்பால் வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஓலை இருமையால் எழுதிநேர்ந்தேன்....” (பெரியபுராணம்:

தடுத், 59) என்று சுந்தரரின் திருமணத்தில் அவரை இறைவன் தடுத்தாட்கொண்டது, அவருடைய பாட்டனார் எழுதிக்கொடுத்த ஆளோலை என்னும் அடிமையோலையின் வழியாகத்தான். இதிலிருந்து அக்காலத்தில் தங்களது பரம்பரையையே அடிமையாக எழுதிக்கொடுக்கும் வழக்கம் இருந்திருப்பது புலனாகிறது.

"தேவரடியார்கள் கோயிற்பணிகளில் ஈடுபட்டுவந்தனர். தாயும்மகளுமாகப் பெண்மக்கள் இருவர், பொன்னமராவதி கோயிலுக்கு அடிமைகளாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு கோயில் நிர்வாகிகளிடம் பிழைப்பை நாடிச்சென்றனர். நிர்வாகிகள் அவர்களைக் கோயில் தேவரடியார்களாக அமர்த்திக்கொண்டு அவர்கட்கு வீடுகளும் நிலங்களும் வழங்கினர் என்று கல்வெட்டுச்செய்தி ஒன்று கூறுகின்றது. திருமெய்யம் தாலுக்காவில், ராங்கியம் என்னும் ஊரில் கோயில் நிர்வாகிகளும் ஊராரும் உமையம்மை என்ற பெண் ஒருத்தியைத் தேவரடியாராக ஏற்றுக்கொண்டு, அவளுக்கு "நாலு திக்கும் வென்ற மாணிக்கம்" என்ற விருதுப் பெயரையும் நிலங்களையும் வீட்டையும் வழங்கினர் (பிள்ளை, 2015, ஜீ.427). மேற்கண்ட சான்றுகளின் மூலமாகத் தமிழகத்திலுள்ள பண்டய மக்கள் தங்களைத் தாங்களே தேரவடியார்களாக இறைப்பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர் என்பது புலனாகிறது.

மேலும் தேவரடியார்களுள் சிலர், தானமாக வழங்கப்பட்டதற்கான சான்றுகளும் இருக்கின்றன. "வயலூர்க் கோயிலுக்குத் திருப்பதிகம் பாடவும் தொண்டு செய்யவும் கவரிப்பிணாக்களாக மூன்று பெண்கள் தானமாக அளிக்கப்பட்டனர்" (பிள்ளை, கே.கே. 2015, ப.340). "நம்பநம்பிக்காடுகள் நங்கை என்ற பெண்ணொருத்தி வேளாளக் குலத்தினள்; தான், தன்மகள், பேரன், பேத்திகள் ஆகிய பதினைவரை முப்பதுகாசுக்கு விற்றுக்கொண்டாள்" (Crooke, 1930, P.218.219125) என்ற குறிப்புத் தேரவடியார்கள் தங்களைக் கோயிலுக்கு அடிமைகளாக விற்றுக் கொண்டதைத் தெளிவாக்குகிறது.

### தேவரடியார்களின் வாழ்வியல் மற்றும் சமயத் தொண்டு

இறைவனின் தொண்டுக்குத் தம்மை அர்பணித்துக் கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் மன்னர் பெருமக்கள், அவர்கள் வசிப்பதற்கென்று வீடுகளையும், நிலங்களையும் மானியங்களாகக் கொடுத்துள்ளதைக் கல்வெட்டுகள் வாயிலாக நாம் அறிந்துகொள்ள முடிகிறது. "ராஜராஜசோழன் (கி.பி .985 முதல் கி.பி 1014) தஞ்சை பெரிய கோயிலில் பணிகளை மேற்கொள்ள, ஆடல் மகளிர் 400 பேரை தளிச்சேரி பெண்டுகளாக நியமித்தார் என்பதை அறிய முடிகிறது. சோழர் காலத்தில் பெண்கள் சம உரிமை பெற்றிருந்ததோடு அதிகாரிகளாக பணியாற்றியிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. அவர்களும் கோயில்களுக்குத் தானம் அளிக்கும் உரிமை பெற்று விளங்கியிருக்கின்றனர். ராஜராஜசோழனின் தேவியான லோகமகாதேவி இட்ட ஆணையை எருதன் குஞ்சரமல்லி என்ற 'அதிகாரிச்சி' நிறைவேற்றியுள்ளார் எனத் திருவையாறு கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது." (தினமணி, 2018).

மேலும் அத்தேவரடியார்களின் பெயர்களும் அவர்களது வீட்டின் கதவு இலக்கமும் முதலாம் ராஜராஜசோழன் கல்வெட்டு ஒன்றில் ஒன்றுவிடாமல் பொறிக்கப்பட்டன (ஷி.மி.மி,மிமி,1979,ழிஷீ.56) என்பதிலிருந்து மன்னர் எந்தளவிற்குத் தேவரடியார்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் சிறப்புச் செய்திருந்தனர் என்பது புலனாகிறது.

கோயில்களில் தேவராம், திருவாசகம் ஓதுவது, இறைவன் திருமுன் நடனம் ஆடுவது ஆகியன தேவரடியார்கள் முதன்மையாகச் செய்த திருப்பணியாகும். "கோயில்களில் மார்கழிதோறும் திருவெம்பாவை ஓதப்பட்டு வந்தது. அதற்கெனவே தேவரடியார்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். வைணவத் திருப்பாடல்களான திருப்பள்ளியெழுச்சியும் திருவாய்மொழியும்

பாராயணம் செய்யப்பட்டன. தேவாரத் திருப்பதிகங்கள் ஓதுவதற்குப் பலநிவந்தங்கள் அளிக்கப்பட்டிருந்தன” (பிள்ளை, 2015, ஜீ.338). இக்கலைகளில் தேர்ச்சி இல்லாதோர் கோயில் தூய்மைப்பணியிலும், மலர்த்தொடுத்தல், விளக்கேற்றுதல் போன்ற பணிகளிலும், கோயில் மடப்பள்ளியில் சமையலராகவும் இருந்துள்ளனர். ஆண்கள் ஓதுவார்களாகவும், நட்டுவனார்களாகவும் விளங்கியுள்ளனர். அவர்களும் மன்னர்களிடம் இருந்து தானங்கள் பெற்றுள்ளனர் (Crooke, 1930, p.10, 44-45).

சங்கக்காலத்தில் இசையிலும் கூத்திலும் சிறந்து விளங்கிய பாணர்கள் மற்றும் விறலியர்களிடமிருந்த அக்கலைகளைத் தேவரடியார்கள் வளர்த்துப் புதுப்பொலிவூட்டினர். கோவில் திருவிழாக்காலங்களிலும், விசேஷநாட்களிலும் கூத்து நடத்தினர். இக்கூத்துகளில் ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். சாந்திக்கூத்து, ஆரியக்கூத்து, சாக்கைக்கூத்து, தமிழக்கூத்து, தெருக்கூத்து போன்றவை அவற்றுள் சில வகைகளாகும்(Crooke, 1930, p.254, 14).

பதியிலார் என்றும் தேவரடியார்கள் என்றும் இருபிரிவாக இத்தேவரடியார்கள் இருந்தார்கள் என்பது அறியப்படுகிறது. தளிச்சேரிப்பெண்களுள்ளும், பதியிலார் என்றும் தேவரடியார் என்றும் பிரிவுகள் உண்டு. திருவதிகையில் நூற்றுக்கால் மண்டபத்தில் சுவாமி ஏறியருளினால் முதலில் திருத்திரை எடுத்தால் பதியிலார் ஆடவும், பிற்பாடு திரை எடுத்தால் தேவரடியார் ஆடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இன்னபதிகங்கள் இன்னன்னவர்கள் இன்னமுறையில் பாடவேண்டுமென்று வற்புறுத்திக்கூறத் தேவரடியார்களுக்கு உரிமை இருந்தது(பிள்ளை, 2015, p.337).

இவ்வாறு இறைப்பணியையும் கலைப்பணியையும் தம் இருகண்களாகக் கருதி வாழ்ந்த தேவரடியார்கள் சங்கம்மருவியகாலம், சோழர்கள் ஆட்சிக்காலம் ஆகியவற்றில் மிகுந்த சிறப்புகளைப் பெற்றுச் சமூகத்தின் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றிப் பாதுக்காக்கப்பட்டனர். சுபநிகழ்ச்சிகளில் தேவரடியார்கள் முந்நிறுத்தப்பட்டனர்; இறைவனைப் பதியாகக் கொண்டவர்களானதால் நித்தியச் சுமங்கலிகளாகக் கருதப்பட்டனர். தேவதாசிகளின் திருமாங்கல்யத்தில் இருக்கும் கருமணிகளைப் புதிதாக மணம் செய்துகொள்ளப்போகும் பெண்ணின் மாங்கல்யத்தில் அவர்களது கைப்படக்கோர்த்தால், அப்பெண்ணும் தீர்க்கச்சுமங்கலியாக வாழ்வாள் என அக்காலத்தில் நம்பப்பட்டது( IOSR Journal Of Humanities And Social Science (IOSR-JHSS) Volume 20, Issue 2, Ver. II (Feb. 2015), PP 50-55).

> “There was a time when devadasis were considered to auspicious and holy that their presence was compulsory at every wedding for the making of the mangal sutra . This was based on the belief that a devadasi is an eternally married suhagan who is never widowed. It was believed that if she made the mangal sutra with her own hands, the bride who would wear it would also die as a sumangali” (IOSR Journal Of Humanities And Social Science (IOSR-JHSS) Volume 20, Issue 2, Ver. II (Feb. 2015), PP 50-55).

இக்காரணங்களினால் அனைத்துத் தேவதாசிகளும் நற்சகுனத்தின் அடையாளமாகக் கருதப்பட்டனர்.

### தேவரடியார்களின் கலைத்தொண்டு

இன்று உலகளவில் பிரசித்திப்பெற்றிருக்கும் பரதநாட்டியமும், கர்நாடகச் சங்கீதமும் தேவதாசிகள் அளித்த பெருங்கொடை என்றால் மிகையாகாது. சமூகத்தில் மன்னர்களால் உயர்ந்தநிலை கோயிற்பணியாட்களாக இருந்த தேவரடியார்கள் இடைப்பட்ட தமிழக வரலாற்றில் மதிப்பிழந்து தாழ்ந்த போதிலும் தங்கள் கலைகளைப் போற்றி வளர்த்தனர். “தாசியாட்டம்” என்றே பரதநாட்டியம் அக்காலத்தில் அழைக்கப்பட்டிருக்கிறது. “தேவரடியாள்கச்சேரி” என்பது “தேவடியாள்கச்சேரி” என்றும் மருவிவிட்டது. ‘சபாபதி’ என்னும் ஒரு பழைய தமிழ்த்திரைப்படத்தில் கதாநாயகனின் தாய், கதாநாயகியைப் பெண்பார்க்கச்

செல்லும்போது, அவ்வீட்டிலிருந்து வந்த இசையொலியைக் கண்டு தேவடியாள் கச்சேரி நடக்கிறதே நல்ல சகுனம்தான் (சபாபதிதமிழ்திரைப்படம் 1941) என்பது இதற்குச் சான்றாகின்றது.

கோயில்களில் அன்றையகாலம் ஆடப்பட்ட நாட்டியமும், பாடப்பட்ட இசையுமே இன்றைய பரதநாட்டியமாகவும், கர்நாடகச் சங்கீதமாகவும் பிரசித்திப்பெற்றுள்ளது (Dr. Saskia Kersenboom certified by: International Dance Council CID-UNESCO www.cid-portal.org DASI ATTAM). தேவதாசி பாரம்பரியம் கர்நாடக இசையுலகுக்கு அளித்துள்ள கொடை உன்னதமானது. தேவதாசிகள் இல்லாத கர்நாடக இசையைக் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது என்று கர்நாடகச் சங்கீதக்கலைஞர் டி.எம்.கிருஷ்ணா அவர்கள் கூறியுள்ளார்(Common Folk .in/ Book Reviews).

> "For many centuries the dances were performed exclusively in the precincts of the great temples by female dancers known as devadasis ("servants of god") whounder went years of training before they were ready to perform in public" (The UNESCO Couries, a window open on the world.1984).

இத்தகைய கூற்றுகள், தேவதாசிகள் கலையுலகிற்கு அளித்த பெரும் பங்களிப்புகளை பறைசாற்றுகின்றன. கோயில்களில் மட்டுமே ஆடப்பட்ட பரதநாட்டியத்தை வெளியுலகிற்குக் கொண்டு வந்தவர் நாட்டிய உலகின் முன்னோடியான பாலசரஸ்வதி அவர்களும் ஒரு தேவதாசியே; பரதநாட்டியத்தைப் பொதுவெளியில் மேடைக்குக் கொண்டு வந்தவர் அவர்; தேவதாசிகளைத் தவிர மற்ற இனப்பெண்களும் பரதநாட்டியம் பயில வேண்டும் என்று அறிவுறுத்தியவர். அதன்படி ருக்மணிதேவி அவர்கள் இவரிடம் நாட்டியம் பயின்று, அதனை மற்றவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கில் கலாக்ஷேத்திரா அமைப்பினைத் தோற்றுவித்தார். அவ்வமைப்பு இன்றும் உலகில் பலபகுதிகளில் பரதநாட்டியத்தையும், கர்நாடக இசையையும் பயில விருப்பமுள்ளவர்களுக்குப் பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறது.

கலையுலகிற்கும் இறைவழிபாட்டிற்கும் தாங்கள் வளர்த்த கலைகளால் மட்டுமின்றி, தங்கள் கொடைத்தன்மையாலும் மிகப்பெரிய பங்களிப்பினைத் தேவதாசிகள் செய்திருக்கின்றனர் என்பதற்கான சான்றுகள் உள்ளன. "மக்கள் நெஞ்சையள்ளும் இசையிலும், கூத்திலும் வல்லுநராக விளங்கிய தேவரடியார்கள் மக்கள் சமூகத்தில் பெருமதிப்புப் பெற்றிருந்தனர். கோயில் நிர்வாகிகளும் அவர்களைப் போற்றிப் பாராட்டி வந்தனர். இக்கலையரசிகளுள் பலர் திரண்ட செல்வத்தையும் மேலாம் செல்வாக்கையும் பெற்றிருந்தனர். கோயில்களுக்கும் கலைவளர்ச்சிக்கும் தேவரடியார்களும் நன்கொடைகள் வழங்கியுள்ளார்கள். கலைவளர்ச்சியிலும், இறைவழிபாட்டிலும் அவர்கள் கொண்டிருந்த பற்றுக்கும் ஈடுபாட்டுக்கும் அவர்களுடைய வள்ளன்மை சான்று பகர்கின்றது"( பிள்ளை, 2015, ஜீ.337).

பெங்களூர்நாகரத்தினம்மாள் என்னும் தேவரடியார்தான் திருவையாற்றில் இருந்த கர்நாடக இசை மகான் தியாகராசர் சமாதியில் அவருக்கெனச் சன்னதி எழுப்பினார். இச்செய்தியே தேவரடியார்கள் கலைகளைத் தங்கள் உயிரெனப் போற்றி வந்ததற்கான சான்றாகும். வருடந்தோறும் சிறப்பாக நடைபெற்று வரும் தியாகராசர்ஆராதனைப் பெருவிழாவினைத் தோற்றுவித்தவரும் இத்தேவரடியாரே ஆவார். தன்னுடைய ஒரு கச்சேரியின் வருமானத்தைக் கொடுத்துச் சென்னை மியூசிக் அகாதெமி உருவாகக் காரணமாக இருந்தவரும் இவரே ஆவார் (Common Folk .in/ Book Reviews).

### தேவரடியார்களின் சமூகத் தொண்டு

தேவரடியார்கள் கலைப்பணி, இறைப்பணி மட்டுமல்லாது பல சமூகப்பணிகளையும் செய்திருக்கின்றனர். இன்றளவும் புதுச்சேரியின் நீராதாரமாக விளங்கக்கூடிய ஆயிக்குளம் ஒருதேவதாசியால் ஏற்படுத்தப்பட்டது. விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணத்தேவராயர் (1509-1529) ஒருசமயம் புதுச்சேரியில் வாழ்ந்த உய்யக்கொண்ட

முதலியாரைச் சந்திக்க வரும் வழியில் இருந்த தேவதாசி ஆயியுடைய வீட்டைக் கோயில் என்று கருதி வணங்கி விடுகிறார். பின்னர் அது தாசியின் இல்லம் என்று அறிந்து அவ்வீட்டை இடிக்க உத்தரவிடுகிறார். வீடு இடிக்க உத்தரவிடப்பட்டதை எண்ணிக் கவலைகொள்ளாத தேவதாசி ஆயி, அதனை மக்கள் பயன்பெறும் நீர்நிலையாக மாற்றிக் கொள்ள மன்னனிடம் கோரிக்கை வைக்கிறாள். அப்படி ஆயி என்னும் தேவதாசியால் உருவானதுதான், புதுச்சேரியில் உள்ள ஆயிக்குளம். அதன்பிறகு புதுச்சேரி பிரெஞ்சுகாலனியாக இருந்தபொழுது இந்த ஆயிக்குளத்தின் வரலாற்றினை அறிந்த அன்றைய பிரெஞ்சு அரசு அவரது சமூகப்பணியினைப் பாராட்டி ஊரின் மத்தியில் ஆயிமண்டபம் என்னும் நினைவுச்சின்னத்தை எழுப்பியுள்ளது (https:// www. India water portal.org/articles/ city-pond-its-aayi).

ஆயிமட்டுமல்ல, ஆயியுடைய சகோதரி ஓசி என்னும் தேவதாசி, ஒசுட்டூர் ஏரியைப் புதுப்பித்திருக்கிறார். பங்காரி என்னும் தேவதாசி பெண்ணையாற்றில் இருந்து கால்வாய் ஒன்றை வெட்டியிருக்கிறார். அக்கால்வாய் பங்காரு வாய்க்கால் என்று அவரது பெயரால் அழைக்கப்படுகிறது. இந்தக் கால்வாயால் தமிழகம், பாண்டிச்சேரி என இருமாநில மக்கள் பயன்பெறுகிறார்கள் (https:// www. India water portal.org/articles/city-pond-its-aayi).

### தேவரடியார்களின் சமூகநிலை மாற்றம்

காலவெள்ளத்தில் அந்நியர்களின் படையெடுப்பினால் தங்களது வாழ்வாதாரத்திற்கு அளிக்கப்பட்ட நிவந்தங்களைப் பறிகொடுத்து வாழ வழியில்லாமல் உடல் அழகை விற்றுப்பிழைக்கும் நிலைக்குத் தேவதாசிகள் தள்ளப்பட்டனர். அருணகிரியாரும், பட்டினத்தாரும் தாசிகளிடம் கொள்ளும் உறவினால் ஏற்படும் தீமைகளைப் பற்றித் தங்கள் பாடல்களில் விவரித்திருக்கின்றனர். இதிலிருந்து தேவதாசிகள் உயர்ந்தநிலையில் இருந்து இழிநிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பது கண்கூடு. "அருணகிரிநாதர் காலத்தில் தேவரடியார்கள் கோயில் திருத்தொண்டுகளைக் கைவிட்டுத் தம் உடல் அழகை விற்றுப்பிழைக்கும் அளவுக்குத் தம்நிலையில் இழிந்துவிட்டனர்.

முஸ்லீம்களின் படையெடுப்புகளினாலும் தமிழகத்துமன்னர்களும் குறுநிலமன்னர்களும் விளைத்த குழப்பங்களினாலும் தெலுங்கர்கள், கன்னடியர் செல்வாக்குப் பெற்று வந்ததாலும் தேவரடியார்கட்குச் சோழப் பாண்டியமன்னர்கள் வழங்கி இருந்த நிவந்தங்கள் பறிபோயின. தேவரடியார்கள் தம் உடைமைகள் இழந்து, பிழைக்க வழியொன்றைத் தேடிக்கொண்டதில் வியப்பேதுமின்று. கோயில்பணிகளுக்கும், சிறப்பாகத் தம்பிழைப்புக்காகவும் தேவரடியார்கள் தொடர்ந்து கலைகளை வளர்த்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்" *(பிள்ளை, 2015.*p.*433).*

இறைவனுக்குச் சேவை செய்தவர்கள் பிழைப்பிற்காக வசதி படைத்தவர்களுக்கும் சமீன்தார்களுக்கும் மிராசுதார்களுக்கும் சேவை செய்யத் தலைப்பட்டனர். இறைவனுக்குக் கலைகளை அர்ப்பணித்து ஆத்மதிருப்தி கொண்டவர்கள், அவற்றை வாழ்வாதரத்திற்காக மனிதர்களுக்குமுன் ஆடிபிழைக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டனர்; தலைமுறை தலைமுறையாகத் தேவனின் அடிமைகளாக இருந்தவர்கள் மனிதனுக்கு அடிமைப்படத் தொடங்கினர். தேவதாசிகள் பாலியற்தொழில் செய்வோர் என்னும் அடையாளத்திற்குள் அடைக்கப்பட்டனர். இறைவனுக்குத் தாங்களாகவே வந்து அர்ப்பணித்துக் கொண்ட முறைமாறி, பரம்பரையாகத் தேவதாசிகள் கோயிலுக்குச் சேவை செய்துவரப் பணிக்கப்பட்டனர். அதற்காகப் பொட்டுக்கட்டும் முறை சமூகத்தில் நிலவி வந்தது. அவர்கள் திருமணம் புரிந்துவாழ அனுமதிக்கப்படவில்லை. பாலியல் இச்சையைத் தீர்ப்பவர்களாகவே மாறிப்போயினர். இச்சமூகச் சீரழிவிற்குள் சிக்கி வெளியேறமுடியாமல் தவித்தனர் தேவதாசிகள். இந்திய விடுதலைப் போராட்டம் வீறுகொண்டு எழுந்தபோது பெண்விடுதலையும் சேர்த்துப் பேசப்பட்டது (Devika, 2018).

பாரதியார், பாரதிதாசன், ஈ.வெ.ரா போன்றோர் நாட்டின் விடுதலையை விட பெண்விடுதலையை முதலில் பெற வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அதிலும், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பெரும் போராட்டங்களை நிகழ்த்தி அவர்களது உரிமைகளைப் பெரியார் மீட்டெடுத்தார். அவ்வகையில் 1920 முதல் பலதரப்பினர் தேவதாசிமுறையை எதிர்த்துப் போராடத் தொடங்கினர். அப்போது நீதிக்கட்சியில் இருந்த டாக்டர் முத்துலஷ்மிரெட்டி, தேவதாசி ஒழிப்புச்சட்டத்தைக் கொண்டுவருவதில் பெரும்முனைப்போடு செயல்பட்டார். இத்தகைய பெரியார்களின் முயற்சியால் 1947ஆம் ஆண்டு தேவதாசி ஒழிப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. தேவதாசிமுறையில் இருந்து விடுபட்ட பெண்கள் மற்ற பெண்களைப்போல் திருமணம் செய்துகொண்டு வாழத்தொடங்கினர். அவர்களது ஆடலும் பாடலும் அனைவராலும் இன்று விரும்பிப் பயிலப்படும் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது (Devika, 2018).

### முடிவுரை

தேவரடியார்கள் என்னும் தேவதாசிகள் பழங்காலத்தில் இறைப்பணியாளர்களாக, கோயிற்பணியாளர்களாக உயர்ந்த இடத்தில் அமர்த்தப்பெற்றுப் போற்றப்பெற்றனர். இடைக்காலத்தில் அவர்கள் மதிப்பிழந்து சமூகத்தின் இழிநிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்கள் வளர்த்த கலைகளான ஆடலும் பாடலும் மற்ற குலப்பெண்கள் கற்றுக்கொள்வது பாவமாகக் கருதப்பட்டது. இதன் விளைவாக, தமிழ்ச்சமுதாயத்தில் அக்கலைகளைப் பயில யாரும் முன்வரவில்லை. ஆனால், தற்போதைய காலத்தில் மற்ற குலத்தவரும் கர்நாடக இசையையும், பரதநாட்டியத்தையும் கற்றுக்கொள்வதைக் கௌரவமாகக் கருதத் தொடங்கிவிட்டனர். அன்று, குடும்பப்பெண்கள் பரதமும், இசையும் கற்றுக்கொள்வது சமுதாய அவமானமாகக் கருதப்பட்டது. இன்று, பெரும்பாலும் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் பரதமும், கர்நாடக இசையும் பயிலப்படுகிறது; “என்மகள் பரதநாட்டியத்தில் சிறந்தவள், என்மகன் கர்நாடகச் சங்கீதம் கற்றுள்ளான்” என்பதைப் பெற்றோர்கள் பெருமையுடன் கூறுகிறார்கள். தற்போது, பாரதத்தேசத்தின் உயர்ந்த கலைகளாகப் பரதமும், கர்நாடகச்சங்கீதமும் உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இக்கலைகளின் உயர்வுக்கு வித்திட்டவர்கள் தேவதாசிகளே. தங்களின் உயர்ந்தநிலை, தாழ்ந்து இழிந்த போதிலும் இக்கலைகளைக் கைவிடாது காத்து வளர்த்துத் தமிழ்ச்சமுதாயத்திற்கு அளித்த பெருமை தேவதாசிகளையே சாரும் எனலாம்.

## References


Desai, P. (1970). Exploitation of Scheduled Caste Women: A Devadasi Cult. *Journal of Global Economy*, *3*(4), 287–293. https://doi.org/10.1956/jge.v3i4.145

Goodale, G. H., & Hastings, J. (1920). Hastings' Encyclopaedia of Religion and Ethics. *The Classical Weekly*, *13*(22), 171. https://doi.org/10.2307/4387983

*http://www.cid-portal.org/*. (n.d.). Www.cid-Portal.org. Retrieved July 19, 2022, from http://www.cid-portal.org/

Sadasivan, K. (2011). *Devadasi system in medieval Tamil Nadu*. Akani Veliyeedu.

Nitish, M. (2017). Cultural difference in emotions. *IOSR Journal of Humanities and Social Science*, *22*(06), 70–78. https://doi.org/10.9790/0837-2206137078

Kersenboom, S. (n.d.). *PARAMPARA – MARAPU Traditional Arts of South India*. www.paramparai.

eu. https://www.paramparai.eu/

Kersenboom-Story, S. C. (2011). *Nityasumaṅgalī: devadasi tradition in South India*. Motilal Banarsidass.

Lepine-Lyons, M., & Nathan, V. (2016). 19. The Story Behind the Devadasi, India's Prostitute of God. *Inquiry@Queen's Undergraduate Research Conference Proceedings*. https://doi.org/10.24908/iqurcp.8823

Pillai.K.K.,(2015*) Tamizhga Varalaru Makkalum Panpadum* , International Institute of Tamil Studies, Chennai.

S, J. (2021). Devadasi System and its Caste Dynamics. *International Research Journal of Tamil*, *3*(3), 89–96. https://doi.org/10.34256/irjt21312

Soneji, D. (2004). Living History, Performing Memory: Devadāsī Women in Telugu-Speaking South India. *Dance Research Journal*, *36*(2), 30. https://doi.org/10.2307/20444590

Venkatraman, V. (2018). Immoral Traffic Prostitution: Indian Press on the Abolition of Devadasi System in the Madras Presidency, 1927-1949. *SSRN Electronic Journal*. https://doi.org/10.2139/ssrn.3152876